நீதித்துறைப் படிவம் எண். 53 [விதி எண். 42–ஐ பார்க்க]

சாட்சியின் வாக்குமூலம்

**(குற்றவியல் நடைமுறைச்சட்டம் அத்தியாயம் XXII )**

நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண். 1, மேட்டூர்.

**C.C. No. 90 / 2021**

**P.W. 4 –ன் வாக்குமூலம்**

**(அரசுதரப்பு சாட்சி / புகார்தாரர் தரப்பு / குற்றஞ்சாட்டப்பட்டவர் தரப்பு / நீதிமன்ற சாட்சி)**

.............

| | | |
|---|---|---|
| பெயர் | : | சண்முகம் |
| தந்தை / கணவர் பெயர் | : | சாமிநாதன் |
| கிராமம் | : | பொட்டனேரி |
| வட்டம் | : | மேட்டுர் |
| மாவட்டம் | : | சேலம் |
| சாட்சி வரிசை எண் | : | **PW4** |
| வயது | : | 44 |

*1969–ஆம் வருடத்திய உறுதிமொழிச்சட்டம் (1969–ஆம் வருடத்திய 44–வது மத்திய சட்டம் )–ன் வகையங்களுக்கு உட்பட்டு சத்தியபிரமாணத்தின் உறுதி செய்யப்பட்டு இன்று **2025–ஆம் வருடம், ஜுலை மாதம், 10–ம்ஆம் தேதி** பதிவு செய்யப்பட்டது.*

**எதிரி ஆஜர் அவரது வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல் விசாரணை** (விசாரணை ஆரம்பிக்கப்பட்ட நேரம்:–01.10 )

1. நான் தற்போது காட்டுரில் குடியிருக்கிறேன். நான் ஆட்டோ டிரைவராக வேலை செய்கிறேன். அ.சா.1 ஐ எனக்கு தெரியும். ஆஜர் எதிரியையும் தெரியும். சுமார் 3 வருடத்திற்கு முன்பு நான் கட்டிட பொருட்களை இறக்குவதற்காக செங்கரடு போனேன். அங்கு பொருட்களை இறக்கி வைத்துவிட்டு முனியப்பன் கோவில்

காட்டுவளவு அருகே நானும், மகேந்திரன் இருவரும் வந்தபோது சுமார் 6–7 நபர்கள் சண்டைப்போட்டு கொண்டிருந்தார்கள்.

2. அங்கு தேவகி மற்றும் ஜெயபிரகாஷ் என்பவரையும் ஆஜர் எதிரியும், 2 நபர்களும் அடித்துக்கொண்டிருந்தார்கள். பின்பு காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு செல்வதாக சென்றுவிட்டார்கள். ஒரு வாரம் கழித்து போலீசார் என்னிடம் விசாரித்து என்னிடம் போன் நம்பர், முகவரி வாங்கிக்கொண்டார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

3. ஒரு வாரம் கழித்து போலீசார் என்னை காலையில் எனது வீட்டின் அருகில் வைத்து விசாரித்தார்கள். காவல் துறை விசாரணையில் தேவகி எனது உறவினர் என்று சொல்லவில்லை. அவர் என்னுடைய உறவினர் அல்ல. தேவகி எங்களது பழைய நிலத்திற்கு போய் வரும்போது எனக்கு பழக்கம்.

4. நான் வரும்போதே சண்டைப்போட்டுக்கொண்டுதான் இருந்தார்கள். நான் வருவதற்கு முன்னால் அந்த இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். பிரகாஷ் மற்றும் தேவகியை ஆஜர் எதிரியும், 2 நபர்களும் தடியால் அடித்துக்கொண்டிருந்தார்கள். 3 நபர்களை தவிர வேறுயாரும் அடிக்கவில்லை. நான் போய் பார்க்கும்போது பிரகாசுக்கு இடதுக்கையில் அடிப்பட்டு இரத்தம் வந்துக்கொண்டிருந்தது. அவரது சட்டையில் இரத்தம் படிந்திருந்ததா என்று எனக்கு தெரியாது.

5. யாரோ ஒருவர் பைக்கில் காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார். முதலில் ஒரு பைக்கில் பிரகாஷை கூட்டிச்சென்றார்கள். அதன்பிறகு மற்றொரு பைக்கில் தேவகியை அழைத்துச்சென்றார்கள். நான் அங்கு சென்றபிறகு தான் பொதுமக்கள் சத்தம் கேட்டு அங்கு வர ஆரம்பித்தார்கள். எனக்கு என்ன பிரச்சனை என்றே தெரியாது என்றாலும், தேவகி எனது உறவினர் என்பதால் அவர் சொல்லி கொடுத்ததற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றால் சரியல்ல, தேவகி வீட்டார்தான்

பொன்னுசாமி வகையறாக்களை அடித்துவிட்டு, பொய் புகார் அளித்துள்ளார்கள் என்றாலும், அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை. விசாரணை முடிக்கப்பட்டது.**

விசாரணை முடிக்கப்பட்ட நேரம்:-(01.25.P.M)

**மேற்படி சாட்சியம் என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்பட்டு, பதிவு செய்யப்பட்ட சாட்சியம் சாட்சிக்கு எடுத்துக்காட்டி அவர் சரி என ஒப்புக்கொண்டு திறந்த நீதிமன்றத்தில் கையொப்பம் செய்தார்.**

**ஓம்/-நா.கோபாலகிருஷ்ணன்,**
**நீதித்துறை நடுவர் எண்.1,மேட்டூர்.**